நாளிதழ் செய்திகள்

மக்கள் ஓசை 30-06-2024

நேர்மறைச் சக்தியை விதைத்தவன் மகாகவி பாரதி

பேராசிரியர் உலகநாயகி புகழாரம்



டில்லிராணி முத்து

மஞ்சோங், ஜூன் 29- தான் படைத்த அத்தனை படைப்புகளிலும் நேர்மறைச் சிந்தனையை விதைத்துச் சென்றவன் தான் மகாகவி பாரதி. அவனது கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் அனைத்திலுமே தன்முனைப்புச் செய்திகள் நிரம்பி இருக்கும் என்றால் மிகையாகாது.

அந்நிலையில் பாரதியின் பாடல்களைத் தொட்ட அனைவருக்குமே அவனது தன்னூக்கச் சக்தி பற்றிக் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவேதான் பாரதி இன்றுவரை சாகாவரம் பெற்ற மகாகவியாக வலம் வருவதோடு தமிழ்க்கூறு நல்லுலகம் போற்றி வணங்குகிறது என்று தமிழ்நாடு பாரதியார் கழகத்தின் தலைவரும் சிறந்த பேச்சாளருமான பேராசிரியர் முனைவர் உலகநாயகி பழனி புகழாரம் சூட்டினார்.

சில தினங்களுக்கு முன்பு சித்தியவான் சித்தர் குடில் ஆன்மீகம் நிலையத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்ற பாரதி காட்டும் பராசக்தி எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்நிலையில் காணி நிலம் வேண்டும் பராசக்தி எனும் பாடலாகட்டும், நல்லதோர் வீணை செய்தே எனும் பாடலாகட்டும், தேசமுத்துமாரி பாடலாகட்டும் அனைத்திலுமே பராசக்தித் தாயை முன்னிருத்தியிருப்பான். மேலும் சாக்த வழிபாட்டில் பாரதி தீவிரமாய் இருந்ததனால்தான் பராசக்தியின் பூரண அருள்பெற்றவனாக திகழ்ந்தான். மனிதகுலம் மாண்புற வேண்டி சாகாவரம் பெற்றப் பாடல்களைத் தந்தான் என்றார் அவர்.

பாரதியின் பல கவிதைகள் பல்வேறு இசைவடிவில் இன்றும் தொடர்ந்து உலா வருவதற்கு காரணமே அவனது பாடல்களில் அவன் விதைத்த தன்னூக்கச் சக்திதான் என்று அவர் புகழ்ந்துரைத்தார்.

முன்னதாக வரவேற்புரையாற்றிய இந்திகழ்ச்சியின் ஏற்பாட்டாளரும் சித்தர் குடில் தலைவருமான ஆசிரியர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் கூறுகையில், பாரதி இவ்வுலகுக்கு இறைவனால் அனுப்பப்பட்டவன். அதோடு மனிதகுலம் மேன்மையுற மக்கள் நலம்பெற காலந்தோறும் இறைவன் அருளாளர்களை அனுப்பிய வண்ணம் இருக்கிறான் என்றார்.

தொடர்ந்து பேராசிரியர் முனைவர் உலகநாயகிக்கு மஞ்சோங் இந்து சங்க சமய ஆசிரியை சரஸ்வதி சுவாமியப்பன் பொன்னாடை போத்தி மாலை அணிவித்து சிறப்பு செய்தார். ஆசிரியர் கோபால் இந்திகழ்ச்சியின் நெறியாளராகப் பணியாற்றி கருத்தாழமிக்க இணைப்புரையும் வழங்கினார். நிகழ்ச்சியினை சமய ஆசிரியை சரஸ்வதி பூங்கா வனம் புராணம் பாடி நிறைவு செய்து வைத்தார். இரவு சிற்றுண்டியோடு நிகழ்ச்சி நிறைவுற்றது.

MALAYSIA NANBAN 25 01 2025





கோலாகலமாக கொண்டாடப்பட்ட ஆதித்தன் பொங்கல் விழா!

(எஸ். பி. பிரபாகரன்)



சித்தியவான், ஜன. 25- மலேசிய இந்து தர்ம மாமன்றம் பேரா மாநிலப் பேரவையின் ஏற்பாட்டில் தேசிய ஆதித்தன் பொங்கல் விழா சித்தியவான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

காலையில் தொடங்கிய பொங்கல் விழா பசு மற்றும் கன்றுக்குட்டிக்கு பாரம்பரிய மரபுப்படி கோபூஜை செய்யப்பட்டு தொடங்கியது. இக்கோபூஜை சித்தியவான் இஸ்கோன் தலைவர் கோகுலேஷ் பிரபு தலைமையில் நடைபெற்றது. ஆலய வளாகத்தில் மூன்று பொங்கல் வைக்கப்பட்டது.

இப்பொங்கலை மலேசிய இந்துதர்ம மாமன்றம் மலேசிய இந்துசங்கம் மற்றும் மாமன்ற இளைஞர் பிரிவினர் ஆகியோர் இணைந்து வைத்தனர்.

பொங்கல் வைத்தலுக்குப் பிறகு பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் தொடங்கின. சிறுவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் என எல்லா தரப்பினர்களும் பங்கு கொள்ளும் வகையில் போட்டி விளையாட்டுகள் நடந்தன.

உறியடித்தல், கோலம் போடுதல், பூ தொடுத்தல், தண்ணீர் குடம் எடுத்து நடத்தல், தலையில் கரகம் வைத்து நடத்தல், முறத்தில் கச்சான் புடைத்தல், கைகட்டி வடை சாப்பிடுதல், சாக்கு ஓட்டம், கயிறு இழுத்தல் என 18 வகையான போட்டிகள் நடைபெற்றன. மாமன்றத்தின் பேரா மாநிலத் தலைவரும் ஏற்பாட்டுக்குழு தலைவருமான கிருஷ்ணன் சுப்பிரமணியம் வரவேற்புரை ஆற்றினார். மாமன்றத்தின் தேசிய துணைத் தலைவர் ரிஷிகுமார் வடிவேலு தலைமை உரை ஆற்றினார். மலேசிய இந்து சங்கம், மஞ்சோங் இந்து சபா, இந்து இளைஞர் இயக்கம், நாம் நற்பணி இயக்கம், சித்தர் குடில், ஐயப்பா சேவை சங்கம் ஆகியவை இணை ஆதரவாளர்களாக இருந்து ஆதரவு தந்தனர். மஞ்சோங் மாவட்டத்திலுள்ள 17 ஆலயப் பொறுப்பாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

MAKKAL OSAI 07-02-2025

ஈப்போ தைப்பூசம் பேராக் அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் நடைபெறும்



எஸ். லிங்கேஸ்வரன்

ஈப்போ, பிப். 7- வரும் 11 ஆம் தேதி நடைபெறவிருக்கும் ஈப்போ தைப்பூச விழா மாநில அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்புடன் நடைபெறும் என்று மாநில அரசு ஆட்சிக் குழு உறுப்பினர் அ.சிவநேசன் கூறினார்.

ஈப்போ இந்து தேவஸ்தான பரிபாலன சபா ஏற்பாட்டில் இவ்விழா நடைபெற்றாலும் இவ்விழா சிறப்புடன் நடைபெற பல அரச இலாகாக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகிறது என்று அவர் சொன்னார்.

இவ்விழாவை முன்னிட்டு தற்காலிகக் கூடாரங்கள் அமைக்க பொது மக்கள், அரசு சாரா இயக்கங்கள் மாநகர் மன்றத்தின் அனுமதியை அவசியம் பெறவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மது பானங்கள் விற்க தடைவிதிக்கப்பட்டுள்ளது, அதனை மீறுவோர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவலையும் சிவநேசன் நேற்று மாநில அரசாங்க செயலகத்தில் தைப்பூச விழாவை முன்னிட்டு அரசாங்க இலாகாக்களின் அதிகாரிகள், ஈப்போ இந்து தேவஸ்தான பரிபாலன சபா அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பிற்குப் பின்னர் இந்திய விவகாரங்களுக்கான தலைவருமான அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.பேராக் மாநிலத்தில் உள்ள கல்லுமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் கோலாகலமாக தைப்பூச விழா நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் ஈப்போ தேவஸ்தானம் சிறப்பான முறையில் செய்துள்ளது. சுமார் லட்சம் பேர் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இந்த ஆண்டு 50 ஆயிரம் பேர் பால் குடம் சுமந்து காணிக்கை செலுத்துவார்கள என்றும் எதிர்பார்க்கப்படு கிறது. இந்த ஆண்டும் சிறப்பான முறையில் இவ்விழா நடைபெற பொது மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிக அவசியம் என்று குறிப்பிட்டார்.



கல்லுமலை தைப்பூசத்தில் இந்துதர்ம மாமன்றத்தின் அளப்பரிய சேவை

டிகே.மூர்த்தி

ஈப்போ, பிப்.14–

எவ்வித பலனையும் எதிர்பார்க்காமல் இந்து தர்மத்தின்படி மலேசிய இந்துதர்ம மாமன்றம் தனது பக்தி சார்ந்த சேவையில் பல ஆண்டுகளாக விழாக்காலங்களில் குறிப்பாக தைப்பூசத்தின் போது நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்களுக்கு தர்மவேல் என்னும் திட்டத்தில் தேவையான உதவிகளும் பூஜையும் முறைப்படி செய்து அவர்களை ஆலயத்திற்கு வழியனுப்பும் சேவையை மாமன்றம் நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டு ஈப்போ கல்லுமலை அருள்மிகு முருகன் ஆலயத்தின் அருகிலுள்ள ஆற்றங்கரை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த தர்மவேல் சேவைப் பந்தலில் அதிகாலை 4.00 மணிக்கே பக்தர்கள் வருகை அளிக்க தொடங்கினர்.

பக்தர்கள் கொண்டுவந்த பாலையும் குடத்தையும் பெற்றுக்கொண்ட நிலையில், முறையாக பாலை குடத்தில் ஊற்றி குடத்தின் மேல்பகுதியை மஞ்சள் துணி வைத்துக்கட்டியதுடன், சந்தனம் குங்குமமிட்டு பூஜை செய்து தீபாராதனைக் காட்டி அர்ச்சகர் எடுத்து வழங்க பக்தர்கள் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என்னும் பக்தி முழக்கத்துடன் ஆலயத்தை நோக்கி ஆனந்தமாய் புறப்பட்டனர்.

பக்தர்களின் தேவையை அறிந்து அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதைக் கண்டு இந்த தர்மவேல் திட்டம் குறித்து பொது மக்களும் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், பலர் அடுத்த ஆண்டு கல்லுமலை ஆலய தைப்பூசத்தில் இறைவனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்களும் மகிழ்ச்சியினை தெரிவித்தனர்.





TAMIL MALAR 14-02-2025

MAKKAL OSAI 19-01-2025

மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் ஏற்பாட்டில்

சித்தியவானில் தேசிய அளவிலான மாபெரும் பொங்கல் கொண்டாட்டம்



டில்லிராணி முத்து

மஞ்சோங், ஜன. 19-

மலேசிய இந்து தர்ம மாமன்றம், ஆதித்தன் கோட்டம், சித்தியவான் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் சித்தியவானில் தேசிய நிலையில் மாபெரும் பொங்கல் கொண்டாட்டம் நடைபெறவுள்ளது.

இந்த மாபெரும் பொங்கல் கொண்டாட்டம் இன்று 19.1.2025ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடங்கி மாலை 4.00 மணி வரை சித்தியவானில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் பேராக் மாநிலத் தலைவரும் சித்தியவான் ஆதித்தன் கோட்டத் தலைவருமான கிருஷ்ணன் சுப்ரமணியம் தெரிவித்தார்.

இப்பொங்கல் விழாவில் பொங்கல் வைத்தல், கேளிக்கை விளையாட்டு, கயிறு இழுத்தல், கரும்பு கடித்தல், உறி அடித்தல், புள்ளி கோலம், தேங்காய் பந்துவீச்சு, சக்கரம் உருட்டுதல், சாக்கு ஓட்டம், கர ஓட்டம், வடை சாப்பிடுதல், தண்ணி கடம் தூக்குதல், பூச்சரம் தொடுத்தல், கலயம் அலங்கரிப்பு, முறம் போடுதல் என இன்னும் பல அசத்தலான பல பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எனவே பொதுமக்கள் அனைவரும் திரளாக வந்து தேசிய அளவில் நடைபெறும் இந்த மாபெரும் பொங்கல் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி மலேசிய இந்துதர்ம மாமன்றம் பேராக் மாநிலப் பேரவையினர் கேட்டுக் கொண்டனர்.

MAKKAL OSAI 23-01-2025

தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்

டில்லிராணி முத்து

மஞ்சோங், ஜன. 23-

தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியன தொடர்ந்து பாதுகாக்கப்படுவதோடு அதனை வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரிடத்தில் கொண்டு சேர்ப்பது மிக மிக அவசியம் என பெருவாஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸே கூ ஹம்மின் இந்திய நலப்பிரிவு சிறப்பு அதிகாரி கோ.தினகரன் வலியுறுத்தினார்.

மலேசிய இந்து தர்ம மாமன்றம், ஆதித்தன் கோட்டம், சித்தியவான் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 19.1.2025ஆம் தேதி காலை 9.00 மணி தொடங்கி மாலை 4.00 மணி வரை இங்குள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற தேசிய நிலையிலான மாபெரும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு பேசினார்.

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். தமிழ் கலை, கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என உலகம் முழுவதும் தமிழர்கள் வழிகளில் வேரூன்றி உள்ளது.

உலகிலுள்ள பல பண்பாடுகளில் சிறந்ததும், முதன்மையானதுமாக தமிழ் பண்பாடு, தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம் இருக்கின்றது. அந்நிலையில் அவற்றை பின்பற்றி பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் தலையாய கடமையும் நம் இளைய தலைமுறையினருக்கு உள்ளது என்பதால் அவர்கள் அதனைத் தவறாது பின்பற்றி பாதுகாக்க வேண்டும் எனவும் தினகரன் கேட்டுக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் தேசிய துணைத் தலைவர் வ.ரிஷி குமார் கூறுகையில் இதுபோன்ற கலாச்சார விழா நடத்துவதால் நம்முடைய கலை, கலாச்சாரத்தை தொடர்ந்து பேணிக் காப்பது மட்டுமன்றி இதனை நம் இளைய தலைமுறையினரிடத்தில் கொண்டு சேர்க்கவும் பெரும் வகையில் துணைபுரிகிறது என்றார்.



சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் அசத்தலான பல வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன என்று மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் பேராக் மாநிலத் தலைவரும், சித்தியவான் ஆதித்தன் கோட்டத் தலைவருமான கிருஷ்ணன் சுப்ரமணியம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் பல பகுதிகளிலிருந்து மலேசிய இந்து தர்ம மாமன்ற உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள், ஆலயத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், சமூக அமைப்புகளின் பொறுப்பாளர்கள், பொது மக்கள் என 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்து சமய விழாக்களின் நெறிகளை நாளைய சமுதாயத்திற்கு புகட்டுவது அவசியம்



(தி.ஆர்.மேத்தியூஸ்)

சுங்கை சிப்புட், செப். 12–

இந்து சமய விழாக்களின் நெறிகளையும், உண்மைகளையும் நாளைய சமுதாயத்திற்கு கொண்டு செல்வதற்கான கடப்பாடும்,கடமையுணர்வும் நம் அனைவரிடமும் ஏற்பட வேண்டுமென சுங்கை சிப்புட்,தாமான் துன் சம்பந்தன் இந்து தர்ம மாமன்றத்தின் மாதர் பிரிவுத் தலைவி கலைச்செல்வி கணேசன் கூறினார்.

அதனை புலப்படுத்தும் வகையில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மலேசிய இந்து தர்ம மாமன்ற அருள்நிலையத்தின் மகளிர், இளைஞர் பிரிவின் இணை ஏற்பாட்டில் மாணவர்களுக்காக வர்ணம் தீட்டும் போட்டியை சிறப்பாக நடத்தியதாக அவர் சொன்னார்.

இந்நிகழ்வில் பேசிய மன்றத்தின் இளைஞர் பிரிவுத் தலைவர் யோகேஸ்வரன் தண்டாயுதபாணி,எதிர்வரும் காலங்களில் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமின்றி,சிறுவர்கள், பெரியவர்களுக்கும் பயனான நிகழ்வுகளை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நம்பிக்கை தெரிவித்தார்.

இங்குள்ள கம்போங் கமுனிங் ஸ்ரீ சஹாயா பாலர் பள்ளியில் காலை முதல் மாலை வரையில் சிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் திரளான மாணவர்களும், பெற்றோர்களும் திரளாகக் கலந்து கொண்டு பேராதரவை வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவர்களுக்கு மலேசிய இந்து தர்ம மாமன்றம் தாமான் துன் சம்பந்தன் அருள் நிலையத்தின் மகளிர் பிரிவுத் தலைவி கலைச்செல்வி கணேசன் பரிசுகளை எடுத்து வழங்கியதோடு,நிகழ்வினை அதிகாரப்பூர்வமாக நிறைவு செய்து வைத்தார்.

TAMIL MALAR 15-12-2024





இந்து சமயத்தின் சவால் என்ன என்பது தெரிந்து விட்டால் மத மாற்றம் ஒழிக்கப்படும்

(டிகே.மூர்த்தி)

பத்துகாஜா, டிச.15– அனைத்து மதத்திற்கும் உரிமையுடைய இறையாண்மை கொண்டிருக்கும் நாடு நம் மலேசியா என்பதில் இந்து சமயமும் பெருமிதம் அடைந்துள்ளது. அந்த சூழ்நிலையில் இந்து சமயத்தைக் குறித்து நம் பிள்ளைகள் வேர்களாக உள்ளனர். நம் மதத்தின் வேர்களை பலப்படுத்துவோம் என்னும் கருப் பொருளில் நேற்று முன்தினம் இங்குள்ள டேசா சங்காட் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் மாணவர்கள் மத்தியில் விளக்கம் அளிக்கப்பட்டது.

மலேசிய இந்துதர்ம மாமன்றம் பத்துகாஜா அருள்நிலையம் சார்பில், லெங்கோங் கோத்தா லீமா தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் கோ. தமிழ்மணியின் ஏற்பாட்டில் இந்து சமயம் சார்ந்த விளக்கவுரையுடன் ஒரு நாள் கருத்தரங்கு பக்தி நெறிமுறையுடன் நடத்தினர்.

இந்த கருத்தரங்கில் மலேசிய இந்துதர்ம மாமன்றம் பேரா மாநில ஆதித்தன் கோட்டத்தின் தலைவரும், லுமுட் இடைநிலைப்பள்ளி முன்னாள் ஆசிரியருமான கிருஷ்ணன் சுப்பிரமணியம் பத்துகாஜா சென்ட்ரல் சமய வகுப்பு மாணவர்கள், துரோனோ தமிழ்ப்பள்ளி மாணவர்கள், பாரிட் கிளேனிலி தமிழ்ப்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்டோர் முன்னிலையில் பேசினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மாநிலம் முழுவதும் நம் பிள்ளைகளுக்கு இந்து சமய வகுப்புகளை நடத்தி மதத்தால் நாம் யார்? என்னும் புரிதலை பசுமரத்தாணி போன்று அவர்கள் மனதில் பதியவைக்க வேண்டியது முதியோர்களின் கடமையாகும் என்றார்.

நாமோ அல்லது நம் பிள்ளைகளையோ மத மாற்றத்திற்கு இலக்காகக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்து இந்து சமயத்தைப் போற்றி வருகிறோம். மத மாற்றம் எண்ணத்துடன் நம் வீட்டின் கதவை தட்டுவார்கள். அவர்களிடம் அதிகம் பேசாமல் வீட்டின் கதவை மட்டுமல்ல, நான் ஓர் இந்து என்று உறுதியோடு அவர்களை அனுப்பி விடுங்கள் என்றும் கிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

அப்போது தான் இந்துதர்ம மாமன்றம் மற்றும் இந்து சங்கம் சமயத்தின் மீது கொண்டிருக்கும் வற்றாத நம்பிக்கை நூற்றுக்கு நூறு வெற்றி அடையும் என்பதில் நாம் அனைவரும் உறுதியாக கடைப்பிடிக்கிறோம். உலகளாவிய ரீதியில் இந்து மதம் என்பது முக்கிய மதமாகவும் மிளிர்கிறது.

அந்த நிலையில், இந்து சமயத்திற்கு சவால் என்பது எதுவுமே கிடையாது. நாம் நாமாக இருப்பதிலும் அதிலும் ஓர் இந்துவாக இருப்பதில் தனித்துவம் நிறைந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்துள்ளோம் என்று அவர் பேசினார்.

MALAYSIA NANBAN 14-12-2024

பத்துகாஜா அருள்நிலைய மாணவர்களுக்கு இந்து சமயக் கருத்தரங்கு





(எஸ்.பி.பிரபாகரன்)

ஈப்போ, டிச. 14–

மலேசிய இந்து தர்ம மாமன்றம் பத்துகாஜா அருள் நிலைய ஏற்பாட்டில் மாணவர்களுக்கான ஒருநாள் இந்து சமயக் கருத்தரங்கு பத்துகாஜா டேசா சங்காட் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

வேர்களை பலப்படுத்துவோம் எனும் கருப்பொருளில் நடைபெற்ற இந்த ஒரு நாள் கருத்தரங்கில் சுற்று வட்டார மாணவர்கள் 70 பேர் கலந்து கொண்டனர்.

அடிப்படையான சமய விளக்கங்கள், சமயக் கதைகள், தன்னூக்க உரைகள், கலந்துரையாடல்கள், குழு நடவடிக்கைகள், மாணவர் படைப்புகள், நுண்ணறிவு விளையாட்டுகள் என பல்வேறு அங்கங்களுடன் இக்கருத்தரங்கு நடைபெற்றது. மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் நிகழ்ச்சியில் பங்கெடுத்தனர்.

பத்துகாஜா அருள்நிலையத் தலைவரும் தலைமையாசிரியருமான கோ.தமிழ்மணி நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.

அவர் தமதுரையில் மாணவர்களுக்கு சமய உணர்வையும் சமயத் தெளிவையும் சிறுவயதிலேயே கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இதனை ஏற்பாடு செய்ததாகக் குறிப்பிட்டார்.



இந்த ஒரு நாள் கருத்தரங்கில் பத்துகாஜா நாகக்கண்ணி அம்மன் ஆலய சமய வகுப்பு மாணவர்கள், ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய சமய வகுப்பு மாணவர்கள், பத்துகாஜா சென்ட்ரல் சமய வகுப்பு மாணவர்கள், துரோனோ தமிழ்ப்பள்ளி மாணவர்கள், பாரிட் கிளேனிலி தமிழ்ப்பள்ளி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டதாகக் கூறினார்.

மலேசிய இந்து சேவை சங்கத்தின் தலைவர் சிவ.சித.முத்துராஜா மற்றும் அவரின் குழுவினர் இந்த ஒருநாள் கருத்தரங்கினை நேர்த்தியாகவும் நடத்திக் கொடுத்தனர். மலேசிய இந்து சங்க பேரா மாநில சமயப் பிரிவின் தலைவர் எம். சரவணன் சிறப்பு வருகை புரிந்தார்.

மாமன்ற பேரா மாநிலத் தலைவர் சு.கிருஷ்ணன், சுங்கை சிப்புட் அருள்நிலையப் பொறுப்பாளர்கள், பெற்றோர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து சிறப்பித்தனர்.

MAKKAL OSAI 15-12-2024

பேராக் மாநில தீபாவளி திறந்த இல்ல உபசரிப்பில்

ஆரோக்கிய உணவுகளுக்கு முன்னுரிமை



சிவநேசன் தகவல்

கவின்மலர்

ஈப்போ,நவ.19–

பேராக் மாநில தீபாவளி திறந்த இல்ல உபசரிப்பு வரும் 23.11.2024 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி தொடங்கி மாலை 5.00 மணி வரை பேராக் ஸ்டேடியம் இந்திரா மூலியாவில் நடைபெறவுள்ளது என்று மாநில சுகாதாரம்,மனித வளம், ஒருமைப்பாடு, இந்திய விவகாரங்களுக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் அ.சிவநேசன் தெரிவித்தார்.

மக்களுக்கு உடல் நலத்தின் அவசியத்தை அறிவுறுத்தும் வகையில் இனிப்பு,செயற்கை வண்ணமூட்டிகள்,எண்ணெய் போன்றவற்றை முற்றிலும் தவிர்த்தும் தேவையான பொருட்களில் குறைத்தும் ஆரோக்கிய உணவுகளுக்கும் பலகாரங்களுக்கும் முன்னுரிமை தந்து தயாரிக்கப்பட உள்ளதாக சிவநேசன் தெரிவித்தார்.

விருந்தோம்பலில் முகான்மை விருந்தினர்களாக பேராக் மாநில சுல்தான் உ நஸ்ரின் முய்ஸுடின் ஷா அவரின் துணைவியாரும், ராஜா மூடாவும் அவரின் துணைவியாரும்,ராஜா ஹீலிர் அவரது துணைவியாரும்,மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ சாரனி முகமட், சட்டமன்ற சபாநாயகர் டத்தோ முகமட் ஸாஹிர் பின் அப்துல் காலிட் ஆகியோருடன் மற்ற பல பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

இவர்களுடன் மாநிலத்தின் 59 தொகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்,24 தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சி பேதமின்றி அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அமைப்புகளின் தலைவர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

அது போலவே பொது மக்களும் திரளாக கலந்து சிறப்பிக்க அழைக்கப்படுகின்றனர். இது தீபாவளி திறந்த இல்ல உபசரிப்பாக மட்டுமல்லாமல் நமது ஒற்றுமையை வெளிப்படுத்தும் விழாவாகவும் கொண்டாடப்படுவதால் அனைவரும் தவறாமல் கலந்து சிறப்பிக்க அழைக்கப்படுகின்றனர்.மாலை 5.00 மணிக்குப் பிறகு சிறப்பு கலை நிகழ்ச்சியும் இடம்பெறும் என்று அவர் அறிவித்தார்.

MAKKAL OSAI 21-12-2024

ஆலயந்தோறும் சமய வகுப்புகளைத் தொடங்குவோம்

டில்லிராணி முத்து

பத்து காஜா, டிச. 21- சமயக் கல்வியை சிறுவயது முதலே பதியமிட வேண்டும். ஆலயங்கள் சமயக் கல்வியை வளர்க்கும் மையங்களாக மாற வேண்டும். இவ்வாறான திட்டமிடலோடு செயலாற்றுவது மிக மிக அவசியம் என அறை கூவல் விடுத்தார் இந்துதர்ம மாமன்றத்தின் பேராக் மாநிலத் தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியம். அண்மையில் மலேசிய இந்துதர்ம மாமன்றம் பத்துகாஜா அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் டேசா சங்காட் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு நாள் இந்து சமயக் கருத்தரங்கில் உரையாற்றியபோது முன்னாள் ஆசிரியருமான அவர் இந்த அறை கூவலை விடுத்தார். வேர்களைப் பலப்படுத்துவோம் எனும் கருப்பொருளோடு தொடங்கிய ஒருநாள் கருத்தரங்கில் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இதில் நாகக்கண்ணி அம்மன் ஆலய சமய வகுப்பு மாணவர்கள், ஸ்ரீ சுப்பிரமணி ஆலய சமய வகுப்பு மாணவர்கள், பத்துகாஜா சென்ட்ரல் சமய வகுப்பு மாணவர்கள், துரோனோ தமிழ்ப்பள்ளி மாணவர்கள், பாரிட் கிளேனிலி தமிழ்ப்பள்ளி மாணவர்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டதாக பத்துகாஜா அருள்நிலையத் தலைவரும் தலைமையாசிரியருமான கோ.தமிழ்மணி தெரிவித்தார். இக்கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஆலய மண்டபத்தை வழங்கிய ஆலயத் தலைவருக்கும் செயலவையினருக்கும் அவர் தம் நன்றியைக் கூறினார். இக்கருத்தரங்கினை மலேசிய இந்து சேவை சங்கத்தின் தலைவரும் ஆசிரியருமான சிவ.சித.முத்துராஜாவும் அவர் தம் குழுவினரும் மிகவும் திட்டமிட்டு நேர்த்தியாக நடத்தினர். இதில் மலேசிய இந்து சங்கம் பேராக் மாநில சமயப் பகுதி தலைவர் எம்.சரவணன் சிறப்பு வருகை புரிந்தார்.



மஞ்சோங் மாவட்டத்தில் 8ஆவது இந்து தர்ம வகுப்பு

ஸ்ரீ சீத்தா ராமர் ஆலயத்தில் தொடங்கியது



டில்லிராணி முத்து

மஞ்சோங், ஜூலை 13- சமய சீர்கேடுகளிலிருந்து விடுபட நம் இளைய தலைமுறையினர் நிறைவான சமயக்கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கில் மலேசிய இந்து தர்ம மாமன்றம் நாடு முழுவதும் பல பகுதிகளில் இந்து தர்ம வகுப்புகளை நடத்தி வருகின்றது.

அவ்வகையில் மலேசிய இந்துதர்ம மாமன்றம் சித்தியவான் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் மஞ்சோங் மாவட்டத்தில் 8ஆவது இந்து தர்ம வகுப்பு இங்குள்ள ஸ்ரீ மஞ்சோங் ஸ்ரீ சீத்தா ராமர் ஆலயத்தில் இனிதே தொடங்கியது.

ஸ்ரீ சீத்தா ராமர் ஆலய நிர்வாகத்தினரின் துணையுடன் இச்சுற்று வட்டார குடியிருப்புப் பகுதிகளில் இந்து தர்ம வகுப்பு குறித்து பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இல்லங்கள்தோறும் சென்று இந்துதர்ம வகுப்பின் அவசியம் பற்றிக் கூறி அறிக்கைகள் கொடுக்கப்பட்டன என்று மலேசிய இந்துதர்ம மாமன்றம் சித்தியவான் அருள்நிலையத்தின் தலைவரும் ஆசிரியருமான கிருஷ்ணன் சுப்ரமணியம் தெரிவித்தார்.

ஆலயத்தில் தர்ம வகுப்பு வாரந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 6.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெற உள்ளதைக் கூறி பிள்ளைகளை அனுப்பி வைக்குமாறு பெற்றோரிடத்தில் கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் கூடிய சுமார் 56 மாணவர்களுக்கு மாதிரி வகுப்பு நடத்தப்பட்டது. தேவாரத்துடன் தொடங்கிய இந்து தர்ம வகுப்பில் சமய விளக்கம், சமய கதை, பஜனை ஆகியவற்றோடு சமயம் சார்ந்த குழு விளையாட்டும் நடத்தப்பட்டது.

இந்த இந்து தர்ம வகுப்பில் மாணவர்களைக் கவரும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் இருந்ததை பெற்றோர் பாராட்டி மகிழ்ந்தனர். தொடர்ந்து மாணவர்களை அனுப்புவதாகவும் கூறினர்.

இவ்வகுப்பில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சித்தியவான் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் இந்து தர்ம பாடப்புத்தகங்கள், எழுதுகோல், வர்ணப்பென்சில், கோப்பு, நோட்டுபுத்தகம் அடங்கிய கைப்பையும் வழங்கப்பட்டன என்றார் ஆசிரியர் கிருஷ்ணன்.

பெருமுயற்சி எடுத்து ஆலயத்தில் தர்ம வகுப்பினை ஏற்பாடு செய்த ஆலய நிர்வாகத்தினருக்கு மனமார்ந்த நன்றியினை மலேசிய இந்து தர்ம மாமன்றம் சார்பில் ஆசிரியர் கிருஷ்ணன் தெரிவித்துக் கொண்டார்.

சமய ஆசிரியர்கள் குணசுந்தரியும் சிவகாமியும் மாணவர்களுக்கு சமயக் கல்வியைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

இந்த சமய வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு இரவு உணவு உள்ளிட்டு மாணவர்களுக்கு பாதுகாப்பு, போக்குவரத்து ஆகியவற்றை ஆலயம் வழங்குகிறது.

இந்நிலையில் ஆலயத் தலைவர் சுப்ரமணியம், துணைத்தலைவர் சந்திரா நாயுடு, சமயப் பகுதி பொறுப்பாளர் வேலாயுதம் ஆகியோருக்கு ஆசிரியர் கிருஷ்ணன் தம் நன்றியை பதிவு செய்து கொண்டார்.

இந்து சமய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தொடர்ந்து துணை நிற்பேன்

சிவநேசன் உறுதி



டில்லிராணி முத்து

ஈப்போ, ஆக. 22- இந்து சமய வளர்ச்சிக்காகவும் இந்துக்களின் நலனில் அக்கறைக் கொண்டும் பல முன்னெடுப்புகள், திட்டங்கள், நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு தொடர்ந்து அதற்கு பக்கபலமாக இருந்து துணை நிற்பேன் என சுங்காய் சட்டமன்ற உறுப்பினரும் பேராக் மாநில ஒற்றுமை, மனிதவளம், சுகாதாரம், இந்தியர் நலப்பிரிவு ஆட்சிக்குழு உறுப்பினருமான சிவநேசன் அச்சலிங்கம் உறுதியளித்தார். மலேசிய இந்துதர்ம மாமன்றம் பேராக் மாநிலப் பேரவை நிர்வாக உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சிவநேசனை அவரின் அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தது கலந்துரையாடியபோது அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார். மாமன்றத்தின் நடவடிக்கைளை தாம் தொடர்ந்து கவனித்து வருவதாகவும் இந்து மத மேன்மையை காப்பதில் மாமன்றத்தின் துரித முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் கூறிய சிவநேசன், இந்து சமயத்தின் மேன்மையான நெறிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு தொடர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார். அதற்குத் தாம் என்றென்றும் பக்கபலமாக துணை நிற்பதோடு நிதியுதவியும் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் அண்மையில் பேராக் மாநில இந்து ஆலயங்கள் விவகார செயற்குழுவில் இந்துதர்ம மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்காக உறுப்பினர்கள் அனைவரும் சிவநேசனுக்கு நன்றி தெரிவித்தனர். அதோடு வரும் ஆகஸ்டு 31 ஆம் தேதி தைப்பிங் ஸ்ரீ நாகமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆதித்தன் கோட்டம் லாருட் மாத்தாங் அருள்நிலைய ஏற்பாட்டில் ஔவை பிராட்டியார் அருளிய விநாயகர் அகவல் பாராயணப் பெருவிழாவை முன்னிட்டு சிவநேசனுக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டது. மாநிலத்தில் உள்ள ஐந்து அருள்நிலையங்களிலிருந்து சுமார் 200 மாணவர்களும் இந்துதர்ம ஆசிரியர்களும் கலந்து கொள்ளவிருக்கும் இந்நிழ்ச்சியை நிறைவு செய்து வைக்க அவருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. அருளாளர்கள் பாடியுள்ள தனிப்பாடல்களை அறிமுகம் செய்வதோடு மனனம் செய்து பாராயணம் செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டதாக பேராக் மாநில ஆதித்தன் கோட்டத் தலைவரும் ஆசிரியருமான கிருஷ்ணன் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நேர்மறைச் சக்தியை விதைத்தவன் மகாகவி பாரதி

பேராசிரியர் உலகநாயகி புகழாரம்



டில்லிராணி முத்து

மஞ்சோங், ஜூன் 29- தான் படைத்த அத்தனை படைப்புகளிலும் நேர்மறைச் சிந்தனையை விதைத்துச் சென்றவன் தான் மகாகவி பாரதி. அவனது கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் அனைத்திலுமே தன்முனைப்புச் செய்திகள் நிரம்பி இருக்கும் என்றால் மிகையாகாது.

அந்நிலையில் பாரதியின் பாடல்களைத் தொட்ட அனைவருக்குமே அவனது தன்னுக்கச் சக்தி பற்றிக் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவேதான் பாரதி இன்றுவரை சாகாவரம் பெற்ற மகாகவியாக வலம் வருவதோடு தமிழ்க்கூறு நல்லுலகம் போற்றி வணங்குகிறது என்று தமிழ்நாடு பாரதியார் கழகத்தின் தலைவரும் சிறந்த பேச்சாளருமான பேராசிரியர் முனைவர் உலகநாயகி பழனி புகழாரம் சூட்டினார்.

சில தினங்களுக்கு முன்பு சித்தியவான் சித்தர் குடில் ஆன்மீகம் நிலையத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்ற பாரதி காட்டும் பராசக்தி எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்நிலையில் காணி நிலம் வேண்டும் பராசக்தி எனும் பாடலாகட்டும், நல்லதோர் வீணை செய்தே எனும் பாடலாகட்டும், தேசமுத்துமாரி பாடலாகட்டும் அனைத்திலுமே பராசக்தித் தாயை முன்னிருத்தியிருப்பான். மேலும் சாக்த வழிபாட்டில் பாரதி தீவிரமாய் இருந்ததனால்தான் பராசக்தியின் பூரண அருள்பெற்றவனாக திகழ்ந்தான். மனிதகுலம் மாண்புற வேண்டி சாகாவரம் பெற்றப் பாடல்களைத் தந்தான் என்றார் அவர். பாரதியின் பல கவிதைகள் பல்வேறு இசைவடிவில் இன்றும் தொடர்ந்து உலா வருவதற்கு காரணமே அவனது பாடல்களில் அவன் விதைத்த தன்னூக்கச் சக்திதான் என்று அவர் புகழ்ந்துரைத்தார். முன்னதாக வரவேற்புரையாற்றிய இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளரும் சித்தர் குடில் தலைவருமான ஆசிரியர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் கூறுகையில், பாரதி இவ்வுலகுக்கு இறைவனால் அனுப்பப்பட்டவன். அதோடு மனிதகுலம் மேன்மையுற மக்கள் நலம்பெற காலந்தோறும் இறைவன் அருளாளர்களை அனுப்பிய வண்ணம் இருக்கிறான் என்றார்.

தொடர்ந்து பேராசிரியர் முனைவர் உலகநாயகிக்கு மஞ்சோங் இந்து சங்க சமய ஆசிரியை சரஸ்வதி கூரியப்பன் பொன்னாடை போத்தி மாலை அணிவித்து சிறப்பு செய்தார். ஆசிரியர் கோபால் இந்நிகழ்ச்சியின் நெறியாளராகப் பணியாற்றி கருத்தாழமிக்க இணைப்புரையும் வழங்கினார். நிகழ்ச்சியினை சமய ஆசிரியை சரஸ்வதி பூங்காவனம் புராணம் பாடி நிறைவு செய்து வைத்தார். இரவு சிற்றுண்டியோடு நிகழ்ச்சி நிறைவுற்றது.

அகவல்களையும் தமிழ் ஆகம மந்திரங்களையும் பாராயணம் செய்வது பயனை அளிக்கும்





கவின்மலர்

தைப்பிங்,செப்.30- அகவல்களையும் தமிழ் ஆகம மந்திரங்களையும் பாராயணம் செய்வது சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லாருக்கும் பெரும் பயனை அளிக்கும் என்று மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் தேசியத் தலைவர் இராதாகிருஷ்ணன் அழகுமலை நினைவுறுத்தினார்.

மலேசிய இந்துதர்ம மாமன்றம் லாருட் மாத்தாங் தைப்பிங் அருள் நிலையம் ஏற்பாட்டில் பேராக் மாநில அளவிலான விநாயகர் அகவல் பாராயணப் பெருவிழா சிறப்புரை ஆற்றிய அவர் இவ்வாறு வலியுறுத்தினார். விநாயகர் அகவல் மட்டுமல்லாமல் இந்துகளின் பக்தி இலக்கியங்களில் ஆற்றல் கொண்ட எண்ணற்ற மந்திரங்களும் பக்திபாடல்களும் உள்ளன. அவற்றைப் பாராயணம் செய்வதன் வழி மாணவர்களது மன ஆற்றலையும் சிந்தனை ஆற்றலையும் வளர்க்க இயலும். அத்தோடு அவர்களது வாழ்நாள் முழுதும் பாதுகாப்பு கவசமாகவும் துணை நின்று காக்கும் என்று குறிப்பிட்டார்.

தைப்பிங் ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பேராக் மாநிலத்திலுள்ள தைப்பிங், பத்துகாஜா, சுங்கைசிப்புட், பந்தாய் ரெமிஸ், சித்தியவான் ஆகிய ஊர்களில் இயங்கும் ஐந்து அருள்நிலையங்களைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்களுடன் இந்து தர்ம வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கேற்றனர். விநாயகர் அகவல் பாராயணத்தில் 17 குழுக்கள் கலந்து கொண்டு ஒப்புவித்தனர். இப்பெருவிழாவில் பல ஆண்டுகளாக சமயத்தொண்டு ஆற்றிவரும் மூத்த சேவையாளர்கள் 9 பேர் சிறப்பிக்கப்பட்டனர்.

இப்பாராயணப் பெருவிழாவை தைப்பிங் நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வித் துணையமைச்சருமான வோங் கா வோவின் இந்திய நலப் பிரதிநிதியும் நகராண்மைக்கழக உறுப்பினருமான சுப்பிரமணியம் இராமநாதன் என்ற ரிஷி சிறப்பு வருகை புரிந்து நிகழ்ச்சியை அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைத்தார்.

தமிழ்மலர் 08-08-2024

8-8-2024 வியாழக்கிழமை தமிழ்



இந்து தர்ம மாமன்றத்தை ஆதரிப்போம் -வ.சிவகுமார்

ஆர்.கிருஷ்ணன்

பத்து காஜா, ஆக. 8-

மலேசிய இந்து தர்ம மாமன்றம், 1982 இல் நிறுவப்பட்ட ஓர் அரசு சாரா அமைப்பு. மலேசியா முழுவதும் மதக் கல்வி மற்றும் சமூக நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகிறது.

பத்து காஜாவில் உள்ள இந்த அமைப்பின் கிளை, பாரம்பரிய நடவடிக்கைகள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, சமூக வளர்ச்சிக்கான அவர்களின் பார்வைக்கு ஏற்ப பல்வேறு மத மற்றும் சமூக கல்வித் திட்டங்களை ஒழுங்கமைப்பதில் தீவிரமாக உள்ளது.

பத்துகாஜா நாடாளுமன்ற அலுவலகம் ஏற்பாடு செய்த "நமது பாரம்பரியம்" நிகழ்ச்சியில், மலேசிய இந்து தர்ம மாமன்றம் பத்துகாஜா கிளைக்கு தனது மக்கள் சேவை மையம் மூலம் நன்கொடை வழங்கியதாக பத்துகாஜா நாடாளுமன்ற உறுப்பினர் வ.சிவகுமார் கூறினார்.

இந்த நன்கொடையானது, குறிப்பாக எதிர்மறையான அறிகுறிகளால் பாதிக்கப்படும் ஆபத்தில் உள்ள இளைஞர்களுக்கு, நன்மை பயக்கும் திட்டங்களை ஒழுங்கமைப்பதை ஆதரிப்பதாகும்.

சமூக மேம்பாடு மற்றும் பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாப்பது நமது பொதுவான பொறுப்பு. இந்த நன்கொடையானது மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் இளைஞர்களுக்கு கல்வி கற்பதிலும் மதிப்புமிக்க கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும் பலப்படுத்தும் என்று நம்புகிறேன் என்று அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவில் உள்ள பல்வேறு இனங்களின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்கான பொதுநல அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கு இணங்க இந்த முயற்சி உள்ளது. ஒவ்வொரு சமூகமும் தங்கள் கலாச்சார அடையாளத்தை ஓர் இணக்கமான மற்றும் உள்ளடக்கிய சூழலில் கொண்டாடுவதற்கும் நிலைத்திருப்பதற்கும் ஒரு தளம் இருப்பதை உறுதிசெய்யவும் அரசாங்கம் முயற்சிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

மலேசியா இந்து தர்ம மாமன்றத்திற்கான ஆதரவு, இந்நாட்டில் ஒற்றுமை மற்றும் கலாச்சார பன்முகத்தன்மைக்கான பாராட்டுகளை வலுப்படுத்தும் மடானி அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

தொடர்ச்சியான ஆதரவுடன், மலேசிய இந்து தர்ம மாமன்றத்தால், இந்த வளமான மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும், நவீனமயமாக்கலின் சகாப்தத்தில் அவை பொருத்தமானதாக இருப்பதை உறுதி செய்வதில் அதன் அர்ப்பணிப்பைத் தொடர உறுதியாக உள்ளது என்று நம்பிக்கையுடன் கூறினார்.

தமிழ்மலர் 06-08-2024

சித்தியவான் சித்தர் குடிலில் ஆன்மீக உரை

தி.கீர்ஷன்

சித்தியவான், ஆக. 6 -

சித்தர் முதல் சமூகநல இயக்கம், மஞ்சோங் மலேசிய இந்துதர்ம மாமன்றம் சித்தியவான் அருளரசியைம். நாம் நற்பணி இயக்கம், பெருவாரி, பேராக் ஆகிய இயக்கங்களின் ஏற்பாட்டில் "அருணகிரிநாதப் பெருமான் -இனியதுபயம் எனதுபிரழும்- முருகா" எனும் தலைப்பில் ஆன்மிக உரைவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வான்மீக உரையை ப.தமிழ்மறவாணர் ஆற்றினார். இவர் ஆசிரியர் கல்வித் தமுலம் கல்தான் அபதன் ஹாலிமின் முன்னாள் விரிவுரையாளரும் பாரதி இலக்கிய நெஞ்சங்கள் தோற்றுநரும் ஆவார். மொத்தம் 30 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு முகமையாளராகப் பங்கேற் தமிழ்ப்பள்ளி, இந்து தர்ம மாமன்றம் சித்தியவான் அருள்நிலையத் தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியம், பெருவாரி தர்மகாத் முனுசாமி, பந்தாய் ஹெலிஸ் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய் செயலாளர் வடிவேல் முன்னாள் தலைமையாசிரியர் முனுசாமி முனியாண்டி, சமய ஆசிரியர் குழந்தை மணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் போன்றவற்றின் பொருட்சுவையும் பதச்சுவையும் ஞானச்சுவையும் பற்றி சேவதந்த நம் மலேசியத் திருநாட்டைப் பொறுத்தவரை ஆடகள் குறைந்த நிலையில் உள்ளனர். தீருப்பகுழ் எனும் மாமருந்தினை ஆழமாகப் பதத்து ஆய்ந்தறிந்தது மட்டுமலாமல் நெடுந்தூர பயணத்தினை மேற்கொண்டு நம்மோடு இனு இங்கு பகிர் வந்தமைக்கு தமிழ்மாறனுக்கு திருவுளன் சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழுக்கு அருங்கொடை தந்தவர்களில் அருணகிரிநாதரும் ஒருவர் என்றும் அவரைப் போல சந்தத் கவிக்கு எவரும் நடு இணையில்லை என்றும் தமிழ் மாறனார் கருத்துரைத்தார்.

நிகழ்ச்சி நாளனறு இந்து தர்ம மாமன்றம் சித்தியவான் அருளரியைத் தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியத்தின் அகவை நன்னாள் என்பதால் அணிச்சை வெட்டி கொண்டாப்பட்டது.



TAMIL MALAR 21-01-2025

6 செய்திகள் தமிழ் மலர்



இந்து தர்ம மாமன்றத்தின் ஆதித்தன் பொங்கல் விழா 2025

"பங்சா மலேசியா" சித்தாந்தம் இந்நாட்டில் கொண்டு வரப்படவுள்ளது - சனெட்டர் சரஸ்வதி

(ஆர்.கிருஷ்ணன்)

மஞ்சோங், ஜன.21-



இந்நாட்டில் இந்தியர் சமூகம் பல தாற்றாண்டுகளுக்கு முன் இங்கு வேளாம் மற்றும் வர்த்தகம் செய்ய ந்தனர். இந்நாட்டின் வளர்ச்சிக்கு பரும் பங்கு அளித்தவர்கள் ன்றால் மிகையாகாது. இந்நாட்டு பிரர்களின் அடையாளம் துவரை பராமரிக்கப்பட்டு ருகிறது. அதற்கு உடந்தையாக ாடு முழுவதும் தை மாதத்தில் ாளகை தமிழர் திருநாள் விழா ரப்பாக கொண்டாப்பட்டு ருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நாட்டில் பல இன க்கள் வாழ்ந்து வருகின்றனர். ம்மக்களிடையே ஒற்றுமை ரத்திற்காக " பங்சா லேசியா " சித்தாந்தம் விரைவில் லகமக்கும் செய்யப்படவுள்ளது. தற்காக ஏற்பாடுகளை மலேசிய றுமைத்துறை அமைச்சு யையறுத்து வருகிறது. பல னத்தவர்களை உள்ளடக்கிய ாக மலேசியா திகழ்வதால் த்தகைய ஒற்றுமை சித்தாந்தம் கம் அவசியம் என்று அவர் ந்துரைத்தார்.

இந்நாட்டில் தைப்பூசம் பெரிய சமய பண்டிகையாகும். இந்த தைப்பூச திருவிழாவில் காவடியை ஏந்தி முருகனுக்கு காணிக்கை செலுத்தும் வேளையில் ஒரு சில தரப்பினர் பொறுப்பற்ற முறையில் நேர்த்தியாக காவடியை எடுக்க தவறி வருகின்றனர். குறிப்பாக பழக் காவடி என்ற பெயரில் டுரியான் காவடியை ஏந்தி வருகின்றனர், ஒரு சிலர் புகழ் பெற்ற காற்பந்து குழுவின் பெயர்களை ஏந்திய வண்ணம் காவடி எடுக்கின்றனர். அதோடு, ஒரு சில எண்கள் கொண்ட காவடியை எடுப்பது போன்ற சம்பவங்கள் நமது தமிழர் கலாச்சார சீரழிவிற்கு கொண்டு செல்கிறது என்று அவர் கூறினார். இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகத்தினர், மலேசிய இந்து சங்கம் மற்றும் இந்து தர்ம மாமன்றத்தினர் ஆகியோர் காவடி எடுக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளிப்பது அவசியமாகும். அதுமட்டுமன்றி, தற்போது இந்திய இளைஞர்கள் முறையான மோதாள இசைகளுடன் காவடியுடன் வருவது பாராட்டப்பட வேண்டிய பண்பாகும் என்று அவர் தெரிவித்தார்.அண்மையில் ஆலய திருத்தலங்களை அரசியல் தலமாக செயல்படுத்த வேண்டாம் என்று கருத்துரைக்கப்பட்டது. காற்பபுணர்ச்சி காரணமாக ஒரு சில தரப்பினர் கீழ்த்தரமாக விமர்சனம் செய்தனர். அவர்தில் என் அரசியல் வாழ்க்கைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கூறி வந்தனர். இவை யாவும் அவர்களின் அறியாமை என்று துணையமைச்சர் சரஸ்வதி கந்தசாமி கருத்தை பதிவு செய்தார்.

இருநாட்டில் இந்திய வம்சாவளியினரான நாம் அனைவரும் முதலில் கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியலில் சிறந்து விளங்க வேண்டும். எப்படி அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இந்திய வம்சாவளியினர் அரசியல் பிரவேசம் செய்து சாதனை செய்து வருகின்றனரோ, அதுபோலவே இருநாட்டில் தமிழர்களின் அரசியல் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

உலகம் முழுவதும் இருக்கல் மற்றும் இந்தியர்களின் அரசியல் டுபாடு வளர்ந்து வருவது பாராட்டுக்குரியது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆதித்தன் பொங்கல் விழாவை மாட்டைக்கொண்டு தொடக்கி வைத்தார் பெருவாரல் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்பு அதிகாரி கோ.தினகரன்.

இந்நிகழ்வின் நிறைவுவிழாவில் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு வெளிட்டார் சரஸ்வதி கந்தசாமி பரிசுகள் எழுது வழங்கினார். அத்துடன் மஞ்சோங் மாவட்டத்தில் செயல்படும் ஆலயங்கள் மற்றும் இயக்கங்களுக்கு நினைவு சின்னம் வழங்கி சிறப்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வினை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்த பேராக் இந்து தர்ம மாமன்ற தலைவர் க.கிருஷ்ணன் மற்றும் அவர் தம் நிர்வாகத்தினருக்கும் தேசிய துணைத்தலைவர் ரிஷி குமார் மற்றும் நிர்வாகத்தினருக்கும் நன்றி

MAKKAL OSAI 23-11-2024



முதியோரைப் போற்றி மதிக்க வேண்டும்



டில்லிராணி முத்து

தைப்பிங், நவ. 23-

வயது முதிர்ந்த பெற்றோரையும் ஆதரவற்ற பெரியோரையும் என்றென்றும் போற்றி மதிக்க வேண்டும் என மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் கெடாமாநில விஞ்ஞாணி கோட்ட ஆலோசகர் கலியன் காளிமுத்து கூறினார். நம் தலைமுறைகளின் விழுதுகளை தந்த ஆலமரங்களை தலை தாழ்த்தி வணங்குவது நம் அனைவரு டைய தலையாய கடமையா கும். பெற்றோரும் முதியோர் களும் கண்ணியமாக வும் கௌரவமாகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் இன்றைய காலகட்டத் கொள்ளாத காரணத்தினால் தான் இன்று நம் நாட்டில் முதியோர் இல்லங்கள் அதிகரித்து வருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தனது குழந்தைகளின் நலனை மட்டுமே முன்னிறுத்தி இரவு பகலாக வேலைப் பார்த்து சம்பாதித்த தந்தையும் கண்துஞ்சாது கவனித்துக் கொண்ட தாயும், அவர்களின் வயதான காலத்தில் ஒருசேர சேர்ந்து வாழ முடியாத நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. ஆதலால் வயது மிகுந்த நமது பெற்றோரையும் ஆதரவற்ற பெரியோரையும் மதிக்க வேண்டும் எனவும் அனைத்து ஆதரவளிக்கும் நல்லெண்ணத்தையும் வேண்டும் என கலியன் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அந்நிலையில் தம்முடைய கொங்காள் முதியோர் இல்லத்தில் வசிக்கும் இந்திய, சீன முதியவர்களுடன் ஒரு பொன் மாலைப்பொழுது எனும் கருப்பொருளில் நடைபெற்ற தீபாவளி உபசரிப்பு நிகழ்ச்சியில் தலைமையுரையாற்றுகையில் அவர் இவ்வாறு பேசினார்.

தைப்பிங் ஜாலான் ஸ்டேஷன் குழந்தைகள் இல்லத்தின் மண்டபத்தில் நடைபெற்ற இந்த தீபாவளி உபசரிப்பு நிகழ்ச்சியை கடந்த 13 ஆண்டுகளாக சொந்த முயற்சியில் தொடர்ந்து நடத்தி வருகிறார் கெடா கலியன் காளிமுத்து.

நிகழ்ச்சிக்கு மண்டபத்தை வழங்கிய குழந்தைகள் இல்லத்து செயலாளர் குமரவேல் சாமிநாதன், செயலவையினருக்கும் ஏற்பாட்டு வேலைகளைக் கவனித்த லாருட் மாத்தாங் அருள்நிலையத் தலைவர் பரமேஸ்வரன் முனியாண்டி, சுங்கை சிப்புட் துன் சம்பந்தன் அருள் நிலையத் தலைவர் பெருமாள் இராசாமி, பொங்காலான் பாரு அருள் நிலையத் தலைவர் அசோக்குமார் சதாசிவம்

TAMIL MALAR 24-11-2024

24-11-2024 ஞாயிற்றுக்கிழமை தமிழ் மலர் சங்கம் 11



தைப்பிங் முதியோர் இல்ல தீபாவளிக் கொண்டாட்டம்

டிகே.ஷர்த்த்

தைப்பிங், நவ.24-

மலேசிய இந்து தர்ம மாமன்ற கொ மாநில கிளைகளுக்கிடையே நடத்தப்படும் இளைஞர்களுக்கான முதலாவது பேச்சுப்போட்டியில் உள்ள முதியோர் இல்லத்தில் வசிக்கும் 14 இந்தியர்கள் மற்றும் 7 சீனர்களுக்கும் தீபாவளி நினைவாக முன்னிட்டு நேர்கடை, சாடையட், பலகாரங்கள் மற்றும் வாழை இலையில் உணவு விருந்தளிப்பினை டி வழங்கப்பட்டது.

இது குறித்து மேலும் விளக்கம் கோட்டத்தின் தலைவரும், பங்சோர் இளைஞர்கள் முன்னாள் ஆசிரியருமான கருணைமல் கப்பிரமணியம் நம்பு மலிடம் கருணையில், இந்த தீபாவளி கொண்டாட்டம், முதியோர்களும் மன்புக்கிடம் நினைவாக வரும் நோக்கத்தில் விடமுடியடன் நாடு பொறு செலவில்

தலைமையேற்று நடத்தி வருகின்றார். இத்துடன் நன்று விடயம், அன்றைய நாளில் நாடிக்கு கலவான உணவுன் கங்கை சிப்பு வாக்கெண் முன்னெடுப்பில் நடத்தி இளை நிகழ்ச்சியில் தேறுதல் வளங்களை முதியோர்களின் செல்வத்தை உலவாக அளித்துள்ளனர். மேலும், பெருமாள் தொடர் கழி ரஜினி நோக்க அனைவரிடம் செய்துள்ளனர்.

முதியோர் இல்லங்களில் உள்ளவர்களை நம் பெற்றோர்களாக மதித்து அவர்கள் அனைவரும் முன்னாளில் செய்துள்ள தியாகங்களை வணங்கி பாப்படுத்த, இது போன்ற நல்ல பெயர்களை அவர்களிடம் சேர்த்து வரும் கலியன் போன்றோருக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வோம்.

இவ்வைபவத்தில் முதியோர்களுக்கும் செய்யும் உதவி வாய்ந்தார் செய்த கருணையின் பால் கொண்டுள்ள உதவியாகும் பாக்கிற்கு அந்த வழிநடைப்பில் வரும்போது இந்த





சமயத் தெளிவு பெற சமயக் கருத்தரங்குகள் அவசியம்

கேசவன் வலியுறுத்தல்

● டில்லிராணி முத்து

சுங்கை சிப்புட், அக். 16-

நாட்டில் நிலவும் சமயக் குழப்பங்கள் தீர சமயக் கருத்தரங்குகளையும் சமயக் கல்வியையும் அதிகப் படுத்துங்கள். இதன் மூலம் நம் சமயத்தின் ஆழத்தையும் அகலத்தையும் உணர்ந்து கொள்ள முடியும். சமயத் தெளிவையும் ஏற்படுத்த முடியும் என சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினர் கேசவன் சுப்பிரமணியம் வலியுறுத்தினார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று இங்குள்ள ஹீவூட் தமிழ்ப்பள்ளியில் மலேசிய இந்துதர்ம மாமன்றம் சுங்கை சிப்புட் தாமான் துன் சம்பந்தன் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் ஞானவேள்வி எனும் கருப்பொருளில் நடைபெற்ற ஒருநாள் இந்து சமயக் கருத்தரங்கினை நிறைவு செய்து உரையாற்றியபோது அவர் இதனைக் கூறினார்.

எல்லா மதங்களும் அன்பையே போதிக்கின்றன. இந்து மதம் அன்பே சிவம் என்று வலியுறுத்துகின்றது. இந்து மதத்தில் உதித்த அனைத்து அருளாளர்களும் அன்பையே வலியுறுத்தினார்கள். வள்ளலார் ஒரு படி மேலே சென்று வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார். உயிர் இரக்கத்தைப் போதித்துச் சென்றார். ஆகவே அன்பைப் போற்றும் உயர்ந்த கோட்பாட்டை சமயக் கருத்தரங்குகள் வழியும் சமயக்கல்வி வழியும் உணர்த்தப்பட வேண்டும் என கேசவன் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். மேலும் இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்த துன் சம்பந்தன் அருள்நிலையத்தைப் பாராட்டிய கேசவன், தம்முடைய சார்பில் அருள்நிலையத்திற்கு ஐயாயிரம் ரிங்கிட் நிதியுதவி வழங்கியதோடு தொடர்ந்து சமயப்பணியை மேற்கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக இந்தகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் தேசியத் தலைவர் இராதாகிருஷ்ணன் கூறுகையில் நாட்டு இந்துமக்களிடையே சமயத்தை வளர்க்க மாமன்றம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் நம் சமயத்திற்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு முன்னின்று குரல் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

தமிழ்மலர் 16-10-2024

செழிக்க தமிழ் மலர் கொண்டாடுவோம் தீபாவளி சங்கம் 11

இந்து சமய நம்பிக்கையுடன் வளர்க்கப்படும் பிள்ளைகள் வேலியைத் தாண்டிப் போவதில்லை

கேசவன் உரை





டிகே.மூர்த்தி

சுங்கை சிப்புட், அக்.16-

இந்த நாட்டில் இஸ்லாம் அதிகாரத்துவ மதமாக இருப்பினும் மற்ற எல்லா மதங்களுக்கும் அங்கீகாரம் உண்டு. அந்த வகையில் பல லட்சம் வெள்ளி செலவில் ஆலயங்களில் கும்பாபிஷேகம் மற்றும் ஆண்டு திருவிழா என்று நடத்தி வருகின்றோம்.

அதன் மூலம் இந்து மதம் தொடர்ந்து வளர்ச்சியை நோக்கிச் செல்வதற்கு அடித்தளமாக பெற்றோர்கள் இருக்கின்றனர் என்றால் அதுதான் மகிழ்ச்சிக்குரியது என சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினர் கேசவன் சுப்பிரமணியம் பேசினார்.

இங்குள்ள 8 ஆவது புதிய தமிழ்ப்பள்ளியாக அமைந்துள்ள ஹீவூட் பள்ளி மண்டபத்தில் நடைபெற்றுள்ள பேரா மாநிலப் பேரவை இந்துதர்ம மாமன்றம் ஆதித்தன் கோட்டம், தாமான் துன் சம்பந்தன் அருள் நிலையம் சார்பில் வேர்களை பலப்படுத்துவோம் என்னும் கருப்பொருளில் (12.10.2024) நடந்தேறிய இந்து சமயக் கருத்தரங்கில் சிறப்பு வருகையாளராக கேசவன் கலந்து கொண்டார்.

அவர் தமது உரையில் தொடர்ந்து பேசுகையில், இன்றைய நிகழ்ச்சியில் சமயம் சார்ந்த குறைந்தபட்சம் 100 மாணவர்களை எதிர்பார்த்த நிலையில் மொத்தமே 54 மாணவர்கள் மட்டுமே பங்குபெற்றுள்ளனர். எல்லா வசதிகளையும் கொண்டிருக்கும் இந்த 2 நாள்கள் இலவச நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளருக்கு மட்டுமின்றி சுங்கை சிப்புட் வட்டார இந்து சமயத்தினருக்கும் நடிக்கும் கூத்தாடிகள் இங்கு வரும் நிகழ்ச்சிக்கு நுழைவுக் கட்டணம் ரிம100 முதல் ரிம1000 ஆக இருந்தாலும் தவறாமல் செலுத்தவும், கோலாலம்பூர் வரை செல்வதற்கும் ஆர்வம் காட்டுகின்றனர். அது போன்று உள்ளூரில் நடக்கும் சொந்த மதத்திற்குரிய நிகழ்ச்சிக்கு அந்த ஆர்வம் இல்லை என்கின்றபோது வேதனை அளிக்கிறது.

முதியோர்கள் மட்டுமல்ல இளைஞர்களின் பங்கு சமயத்திற்கு மிக மிக அவசியம். அவர்கள் ஆன்மிகத்தில் ஈடுபடும்போது மாவட்ட போலீஸ் தலைவர் கூறுவதைப் போன்று குற்றவியல் பிரச்சினைக்கு கிஞ்சிற்றும் இடமில்லை.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைமுறைக்கு முன்னோடியாக இருந்தால் இந்து மதம் என்ற வேலியைத் தாண்டிச் செல்லமாட்டார்கள். ஒவ்வொரு பெற்றோரும் விடுமுறை நாள்களில் நடைபெறும் நம் சமய வழிபாட்டு நிகழ்வுக்கு பிள்ளைகளைக் கூட்டிச் செல்லவேண்டும்.

மக்கள் ஓசை 17-10-2024



சமயத் தெளிவுபெற சமயக் கருத்தரங்குகள் அவசியம்

கேசவன் வலியுறுத்தல்

● டில்லிராணி முத்து

சுங்கை சிப்புட், அக். 17-

சமயத் தெளிவு பெற சமயக் கருத்தரங்குகள் மிக மிக அவசியம் என சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினர் கேசவன் சுப்பிரமணியம் வலியுறுத்தினார். ஹீவூட் தமிழ்ப் பள்ளியில் மலேசிய இந்துதர்ம மாமன்றம் சுங்கை சிப்புட் தாமான் துன் சம்பந்தன் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் ஞானவேள்வி எனும் கருப்பொருளில் நடைபெற்ற ஒரு நாள் இந்து சமயக் கருத்தரங்கினை நிறைவு செய்து உரையாற்றுகை யில் அவர் இதனைக் கூறி னார்.

நாட்டில் நிலவும் சமயக் குழப்பங் கள், தீர சமயக் கருத்தரங்குகளையும் சமயக் கல்வியையும் அதிகப்படுத் துங்கள் என வலியுறுத்திய கேசவன், இதன் மூலம் நம் சமயத்தின் ஆழத்தையும் அகலத்தையும் உணர்ந்து கொள்ளவும் சமயத் தெளிவை ஏற்படுத்தவும் முடியும் என்றார். மேலும் இக்கருத்தரங் கினை ஏற்பாடு செய்த துன் சம்பந்தன் அருள்நிலையத்தைப் பாராட்டிய கேசவன், தம்முடைய சார்பில் அருள் நிலையத்திற்கு 5,000 ரிங்கிட் நிதியுதவி வழங்கியதோடு தொடர்ந்து சமயப்பணியை மேற்கொள்ளும்படி யும் கேட்டுக்கொண்டார்.

மலேசிய நண்பன் 17-10-2024

14 நண்பன் அக்டோபர் 17, வியாழக்கிழமை 2024 செய்திகள்

சுங்கை சிப்புட் ஹீ வூட் தமிழ்ப்பள்ளி சமயக் கருத்தரங்கு



(எஸ்.பி.பிரபாகரன்)

ஈப்போ, அக்.17-

மலேசிய இந்துதர்ம மாமன்றம் சுங்கை சிப்புட் தாமான் துன் சம்பந்தன் அருள்நிலைய ஏற்பாட்டில் மாணவர்களுக்கான ஒருநாள் இந்துசமயக் கருத்தரங்கு ஹீ வூட் தமிழ்ப் பள்ளியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சுங்கை சிப்புட் வட்டாரத்தில் உள்ள எட்டு தமிழ்ப்பள்ளியில் இருந்து சுமார் 60 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வேர்களைப் பலப் படுத்துவோம் எனும் கருப்பொருளில் நடை பெற்ற இக்கருத்தரங்கு காலையில் மாணவர் பதிவுக் குப்பின் தொடங்கியது. இக்கருத்தரங்கு இந்து சேவை சங்கத்தின் திறன் வாய்ந்த பயிற்சியாளர்களால் நடத்தப்பட்டது. காலையில் பூஜையுடன் தொடங்கிய இக்கருத்தரங்கில் மாணவர் கள் கடைபிடிக்க வேண்டிய அடிப்படையான இறை வழிபாட்டு முறைகள் போதிக்கப்பட்டன. குழு முறையில் கலந்துரையாடல் கள், நுண்ணறிவு விளையாட்டுகள், கருத்தாடல்கள், பிரச்சினைக் களைதல் போன்ற தன்னாற் றலையும் தனித்திறனையும் வளர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எல்லா நடவடிக்கைகளிலும் மாணவர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கினை சுங்கை சிப்புட் ம.இ.கா. தொகுதி காங்கிரஸ் தலைவர் வி.சின்னராசு நிறைவு செய்து வைத்தார். இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்த தாமான் துன் சம்பந்தன் அருள் நிலைய செயலவையின ரைப் பாராட்டினார். இதுபோன்ற கருத்தரங்குகளை, சமய நடவடிக்கைகளை தொடர்ந்து செய்யுமாறு கேட்டுக் கொண்டதோடு தனது முழு ஆதரவையும் தருவதாகத் தெரிவித்தார்.



மலேசிய நண்பன் 27-09-2024

செய்திகள்



தைப்பிங் நகரில் பேரா மாநில அளவிலான விநாயகர் அகவல் பாராயணப் பெருவிழா



(எஸ்.பி.பிரபாகரன்)

தைப்பிங், செப்.27-

மலேசிய இந்துதர்ம மாமன்றம் லாருட் மாத்தாங் அருள்நிலையம் ஏற்பாட்டில் பேரா மாநில அளவிலான விநாயகர் அகவல் பாராயணப் பெருவிழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தைப்பிங் ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பேரா மாநிலத்திலுள்ள ஐந்து அருள்நிலையங்களிலிருந்து 200 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பத்துகாஜா, சுங்கைசிப்புட், பந்தாய் ரெமிஸ், சித்தியவான் ஆகிய ஊர்களில் இயங்கும் இந்துதர்ம வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கேற்றனர். விநாயகர் அகவல் பாராயணத்தில் 17 குழுக்கள் கலந்து கொண்டு ஒப்புவித்தனர்.

இப்பெருவிழாவில் பல ஆண்டுகளாக சமயத் தொண்டு ஆற்றிவரும் மூத்த சேவையாளர்கள் 9 பேர் கௌரவிக்கப் பட்டனர். இப்பாராயணப் பெருவிழாவை தைப்பிங் நாடாளுமன்ற இந்திய நலப் பிரதிநிதியும் தகராண்மைக்குழு உறுப்பினருமான சுப்பிரமணியம் இராமநாதன் சிறப்பு வருகை புரிந்து நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு தம்முடைய முழு ஆதரவையும் நிதியுதவியையும் வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

லாருட் மாத்தாங் அருள் நிலையம் தொடர்ந்து சமய சேவை ஆற்றிவர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இவ்விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த லாருட் மாத்தாங் அருள்நிலையத் தலைவர் பரமேஸ்வரன் முனியாண்டி மற்றும் செயலவையினரை வெகுவாகப் பாராட்டினார். இப்பாராயணப் பெருவிழாவின் நிறைவாக விநாயகர் அகவல் பாடல் பதாகை ஆலய மண்டபத்தில் நிறுவப்பட்டதையும் வெகுவாகப் பாராட்டினார். மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் தேசியத் தலைவர் இராதாகிருஷ்ணன் அழகுமலை தமது சிறப்புரையில் இதுபோன்ற மந்திர ஆற்றல் கொண்ட பாடல்களைப் பாராயணம் செய்வதன் வழி மாணவர்களது மன ஆற்றலையும் சிந்தனையாற்றலையும் வளர்க்கும். அத்தோடு அவர்களுக்கு பாதுகாப்பு கவசமாகவும் இருந்து துணைவரும் என்று குறிப்பிட்டார். "மேலும் இந்த மண்டபத்தை வழங்கி பிற உதவிகளையும் செய்து கொடுத்த ஆலய நிர்வாகத்திற்கும் செயலாளர் மணிவண்ணனுக்கும் மாமன்றம் நன்றி தெரிவித்துக் கொண்டது.

பெருவாஸ் இந்துதர்ம வகுப்பு மாணவர்கள் ஒளவை பிராட்டியாரின் அருட்கொடைகள் எனும் தலைப்பில் அரங்கேற்றிய இலக்கிய குறுநாடகம் அனைவரையும் கவர்ந்தது.

மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் என சுமார் 250 பேர் கலந்து கொண்ட இப்பெருவிழாவில் மாமன்றத்தின் பொதுச்செயலாளர் சுப்பிரமணி சேணையா துணைத்தலைவர் ரிஷிகுமார் வடிவேலு, பேரா மாநிலத் தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் இந்து சேவை சங்கத் தலைவர் சிவ.சித.முத்துராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





தமிழ்மலர் 30-09-2024

நினைத்ததை நடத்தி வைக்கும் விநாயகர் அகவல் பாடல்கள்: தைப்பிங்கில் பெருவிழா

டிகே.மூர்த்தி

தைப்பிங், செப்.30-

நேற்று முன்தினம் மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் சார்பில், லாருட் மாத்தாங் அருள்நிலைய ஏற்பாட்டில் மாநில அளவிலான விநாயகர் அகவல் பாராயணம் பெரிய அளவில் பக்தி பெருவிழாவாக நடைபெற்றது.

அருள்நிலையங்களில் இருந்து 17 குழுக்கள் என்னும் நிலையில், ஏறக்குறைய 200 மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிலையில், இந்து தர்ம மாமன்ற வகுப்பாசிரியர்களும் உறுதுணையாக இருந்தனர். விநாயகர் அகவல் என்றால், அழைத்தவர் குரலுக்கு நிச்சயமாக அவன் கருணை உண்மையான தொண்டர்களுக்குக் கிடைக்கப் பெறுவோம் என்பது பாடல்களில் பொருள்படுகின்றன.







மேலும், தைப்பிங் நாடாளுமன்றத்தின் சார்பில் இந்திய நலப் பிரதிநிதியும், ஊராட்சி மன்ற செயலவை உறுப்பினருமான இரா.சுப்பிரமணியம் சிறப்பு வருகை அளித்து, நிகழ்ச்சியை சமய முறைப்படி தொடக்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், இது போன்று நிகழ்ச்சிகளுக்கு தைப்பிங் நாடாளுமன்றம் தவறாமல் நிதியுதவி செய்கிறது என்றார்.

லாருட் மாத்தாங் அருள்நிலையம் ஆற்றிவரும் சமய தொண்டினைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், இந்த விழா சிறப்புக்கு முத்தாய்ப்பாக விளங்கும் இந்த அருள்நிலையத்திற்குத் தலைமையேற்றுள்ள எம்.முனியாண்டி மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டிப் பேசினார்.

அடுத்து இந்து தர்ம மாமன்றத்தின் தேசியத் தலைவர் அ.இராதாகிருஷ்ணனின் உரையில், இங்கு பாடப்பட்ட பாடல்களை வெறும் ஸ்தோத்திரப் பாடலாக கருத வேண்டாம். நம்மைச் சூழ்ந்திருக்கும் துன்பங்களை அகற்றி அருள் வழி யாது என்பதைப் நமக்கு தெள்ளத்தெளிவாக புரியவைக்கிறது.

மேலும், மாணவர்களுக்கு மன ஆற்றலோடு, சிந்தனை ஆற்றலையும் வளர்க்கிறது. தவிர, அவர்களுக்கு பாதுகாப்பு கவசமாகவும் இருந்து துணைப்புரிகிறது. ஆலய மண்டபத்தில் நடைபெறும் இந்த பெருவிழா எல்லா வகையிலும் சிறப்புடன் நடைபெறுவதற்கு பேராதரவு வழங்கியுள்ள ஆலய நிர்வாகத்திற்கும், செயலாளர் மணிவண்ணனுக்கும், இராதாகிருஷ்ணன் நன்றி தெரிவித்தார்.

விழாவில், பல காலமாகவே சமயத்தொண்டாற்றி வரும் மூத்த சேவையாளர்கள் 9 பேர் சிறப்புச் செய்யப்பட்டனர். மேலும், பெருவாஸ் இந்துதர்ம வகுப்பு மாணவர்கள் ஒளவையாரின் 'அருட் கொடைகள்' என்னும் தலைப்பில் நடித்துக்காட்டிய குறுநாடகம் என்பது மலேசிய இந்து தர்ம மாமன்ற நிர்வாகத்தினரையும் பார்வையாளர்களின் உள்ளங்களையும் கவர்ந்தன.

மகள ஓனிச 28-09-2024

சித்தியவான் மாமன்றத்தின் பிரார்த்தனை



டில்லிராணி முத்து

மஞ்சோங், செப். 28-
உள்ளூர் பல்கலைக்கழகத்தில் மேற்கல்வியைத் தொடர வாய்ப்பு கிடைத்துள்ள மாணவர்களுக்கு மஞ்சோங் ஸ்ரீ சீத்தா ராமர் ஆலயத்தில் சிறப்புப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.
மலேசிய இந்துதர்ம மாமன்ற சித்தியவான் அருள்நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சிறப்புப் பிரார்த்தனையில் மஞ்சோங் மாவட்டத்திலுள்ள ஐந்து மாணவர்கள் கலந்து கொண்டனர்.
மஞ்சோங் ஸ்ரீ சீத்தா ராமர் ஆலயத்தில் நடைபெற்ற இச்சிறப்பு பூஜையில் உரையாற்றிய இந்துதர்ம மாமன்றத்தின் சித்தியவான் அருள்நிலையத் தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியம், மேற்கல்விக்குச் செல்லும் மாணவர்கள் இறைவனின் ஆசியோடும் பெற்றோரின் நல்லாசியோடும் செல்ல வேண்டும் என்பதற்காக இதனை ஏற்பாடு செய்ததாகக் குறிப்பிட்டார். மேலும் இவர்கள் பிற மாணவர்களுக்கு ஆற்றிய சேவைகளை கருத்தில் கொண்டு நன்றி சொல்வதற்காகவும் இச்சிறப்புப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மலேசிய நண்பன் 12-06-2024



இப்பட்டறையில் கலந்து கொண்டனர்.



மலேசிய இந்துதர்ம மாமன்றம் பேரா மாநில பேரவையின் சமயக் கருத்தரங்கு



(எஸ்.பி.பிரபாகரன்)

சித்தியவான், ஜூன் 12-
ஞானப்பயிர் வளர்ப்போம் என்ற கருப்பொருளில் இரண்டு நாள் சமயக் கருத்தரங்கு ஆயர்தாவார் கொலம்பியா தாமான் சுங்கை வாங் அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது.
முதல் நாள் 13 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வேர்களைப் பலப்படுத்துவோம் என்ற தலைப்பில் நடைபெற்றது.
இதில் மஞ்சோங் வட்டார ஆலயங்களில் நடைபெற்று வரும் இந்துதர்ம வகுப்பில் பயிலும் மாணவர்களில் 61 பேர் கலந்து கொண்டனர்.
காலையில் ஆலயப் பிரார்த்தனையோடு தொடங்கிய கருத்தரங்கில் இந்து சமயப் பாடம், மந்திர ஜெபம், பஜனை, தியானம், விநாயகர் அகவல் பாராயணம், ஒருமுகச் சிந்தனையை வளர்க்கும் சமய விளையாட்டுகள், குழு கலந்துரையாடல் போன்றவை இடம்பெற்றன.
இந்த இரண்டு நாள் கருத்தரங்கினை இந்து சேவை சங்கத்தின் தேசியத் தலைவரும் ஜொகூர் மாநில நல்லாசிரியருமான சிவ.சித.முத்துராஜா குழுவினர்களுடன் நடத்தினர்.
இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட சித்தியவான் அருள்நிலையம், பத்துகாஜா அருள்நிலையம், சுங்கை சிப்புட் தாமான் துன் சம்பந்தன் அருள்நிலையம், தைப்பிங் லாருட் மாத்தாங் அருள்நிலையம், பந்தாய் ரெமிஸ் பெங்காலான் பாரு அருள்நிலையம் ஆகியவற்றுக்கு விநாயகர் அகவல் பாராயண அட்டைகள் வழங்கப்பட்டன.
எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் தைப்பிங்கில் விநாயகர் அகவல் பாராயணப் பெருவிழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
இதற்கிடையே மலேசிய இந்துதர்ம மாமன்றத்தின் தேசியத் துணைத்தலைவர் ரிஷிகுமார் வடிவேலு பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் நற்சான்றிதழ் வழங்கினார்.
இக்கருத்தரங்கில் பெருவாஸ் நாடாளுமன்ற உறுப்பினரின் இந்திய நலப் பொறுப்பதிகாரி தினகரன் கோவிந்தசாமி கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்.

மலேசிய நண்பன் 19-07-2024

ஆண்டு தோறும் வெவ்வேறு பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டு வந்த முன்னாள் குடும்பத்தினரும் இணைந்து கொண்டிருந்தது இந்நிகழ் விற்கு மேலும் மெருகூட்டுவ 1970ஆம் ஆண்டு பிறந்து இப்பள்ளியில் தங்களின் தம்மை தொடர்புக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக வாசு கூறினார். உள்வீதி ஊர்வலமும் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தைப்பிங் சின் வா தோட்டத் தமிழ்ப்பள்ளியில் சமயக் கருத்தரங்கு





(எஸ்.பி.பிரபாகரன்)

தைப்பிங், ஜூலை 19-
மலேசிய இந்துதர்ம மாமன்றம் தைப்பிங் லாருட் மாத்தாங் அருள் நிலையமும் கமுந்திங் சின் வா தோட்டத் தமிழ்ப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இணைந்து ஞானப்பயிர் வளர்ப்போம் எனும் கருப்பொருளில் இரண்டு நாள் இந்து சமய அடிப்படைப் பயிலரங்கு சிறப்புடன் நடைபெற்றது.
கமுந்திங் சின் வா தோட்டத்தமிழ் பள்ளியில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.
இப் பயிலரங்கில் சின் வா, யம் செங், உலுசெபாங் ஆகிய மூன்று தமிழ்ப்பள்ளிகளைச் சேர்ந்த 68 மாணவர்கள் கலந்து கொண்டனர்.
மாணவர்களுக்கு அடிப்படையான சமயக் கல்வி போதிக்கப்பட்டது.
அடிப்படையான சில நன்னெறி விதிமுறைகள் கற்பிக்கப்பட்டன.
இப்பயிலரங்கினை சின் வா தோட்டத் தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் நாகராஜா பழநியப்பன் நிறைவுரையாற்றி கலந்து கொண்ட மாணவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்.
பெரியோர்களுக்கான ஞான வேள்வி எனும் தலைப்பில் பயிலரங்கு நடைபெற்றது.
இதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.
தைப்பிங் நகராண்மைக் கழக உறுப்பினர் சுப்பிரமணியம் ராமநாதன் சிறப்புரை ஆற்றினார்.
லாருட் மாத்தாங் அருள்நிலையத் தலைவர் பரமேஸ்வரன் முனியாண்டி பேரா மாநில ஆதித்தன் கோட்டம் தலைவர் ஆசிரியர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் ஆகியோரின் உரையும் இடம் பெற்றது.
மலேசிய இந்துதர்ம மாமன்ற தேசிய துணைத்தலைவர் ரிஷிகுமார் வடிவேலு கலந்து கொண்டவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்.
இரண்டு நாள் கருத்தரங்கினை இந்து சேவை சங்கத்தின் தேசியத் தலைவர் சிவ.சித.முத்துராஜா தமது குழுவினரோடு வழிநடத்தினர்.

மலேசிய நண்பன் 21-07-2024

பெருவாஸ் கங்கா நகரத்தில் திருவாசகம் தந்த மணிவாசகர் குருபூஜை



(எஸ்.பி.பிரபாகரன்)

பெருவாஸ், ஜூலை 21- பெருவாஸ் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் திருவாதவூரார் எனப் போற்றப்படுகின்ற மணிவாசகப் பெருமானுக்கு குரு பூஜை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சதாசிவத்தையே தொழுத மாணிக்க வாசகர் அவதரித்த ஆனி மாதம் மகம் நட்சத்திரத்தில் எல்லா திருக்கோயில்களிலும் பெருமானது குருபூஜை வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மலேசிய இந்துதர்ம மாமன்றம் சித்தியவான் அருள்நிலையமும் பெருவாஸ் நாம் நற்பணி இயக்கமும் இணைந்து ஆலயத்தின் ஆதரவோடு இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

மஞ்சோங் மாவட்டத்தில் சமய வகுப்புகள் நடத்திவரும் பொறுப்பாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

விழாவின் சிறப்பம்சமாக தமிழ்நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட பன்னிரு திருமுறை நூல்கள் திருவாதவூரார் திருவடிகளில் வைத்து பூஜை செய்யப் பட்டு சிவபுராணம் பாடி சிவமந்திரங்கள் ஒதி உள்வீதி வலம் கொண்டு வரப்பட்டு ஆலயத்தில் வைக்கப்பட்டது.

இந்த விழாவினை முன்னின்று நடத்திக்கொடுக்க மலேசிய அர்ச்சகர் சங்கத் தலைவர் சிவஸ்ரீ நித்தியானந்த குருக்கள் வருகை புரிந்து விழாவினை முன்னின்று சிறப்புற நடத்தியதோடு சமய சொற்பொழிவும் ஆற்றினார்.

இந்துதர்ம மாமன்ற சித்தியவான் அருள்நிலையத் தலைவரும் பேராக் மாநில ஆதித்தன் கோட்டத் தலைவருமான கிருஷ்ணன் சுப்பிரமணியம் உரையாற்றினார். நால்வர் குருபூஜை ஒவ்வொரு ஆலயத்திலும் நடத்தப்பட வேண்டும் என்பது மாமன்றத்தின் கொள்கை. அந்த வகையில் குருபூஜைகள் ஆலயங்களில் ஏற்பாடு செய்து வருவதாகக் குறிப்பிட்டார்.

திரு வடு எடுத்தல் எனும் சமய நாடகத்தை ஆலய சமய வகுப்பு மாணவர்கள் திறம்படப் படைத்தனர். அவர்களது படைப்பு அனைவரது பாராட்டையும் பெற்றது.



Scanned with CamScanner

MAKKAL OSAI 24-10-2024

பண்டிகைக் காலங்களில் ஏழை எளிய மக்களையும் நாம் மறக்கக்கூடாது



டில்லிராணி முத்து

மஞ்சோங், அக். 24-

மலேசிய இந்துதர்ம மாமன்றம் வாழ்வில் ஒளியேற்றுவோம் எனும் கருப்பொருளில் வசதியற்ற குடும்பங்களுக்கு ஆண்டுதோறும் தீபாவளி அன்பளிப்புகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில் பண்டிகைக் காலங்களில் ஏழை எளிய மக்களையும் மறவாமல், அவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் நேற்று சித்தியவான் அருள்நிலையம் ஸ்ரீ மஞ்சோங்கில் வீற்றிருக்கும் ஸ்ரீ சீத்தா ராமர் ஆலயத்தில் வசதியற்ற இந்தியக் குடும்பங்களுக்கு தீபாவளி அன்பளிப்புகளை வழங்கியது. தனித்து வாழும் தாய்மார், உடற்பேறு குறைந்தவர்கள், வசதி குறைவு போன்ற 25 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

மஞ்சோங் வட்டாரம் மட்டுமன்றி பெருவாஸ், ஆயர்தாவார் வட்டாரங்களில் வசிக்கும் வசதி குறைந்த குடும்பங்களுக்கும் தீபாவளிக்கான அன்பளிப்புகள் வழங்கப்பட்டன என்று சித்தியவான் அருள்நிலையத் தலைவர் கிருஷ்ணன் சுப்பிரமணியம் கூறினார்.

இந்தத் தீபாவளி அன்பளிப்பு நிகழ்ச்சி வெற்றிபெற ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய ஸ்ரீ மஞ்சோங் ஸ்ரீ சீத்தா ராமர் ஆலய நிர்வாகத்திற்கும் பெருவாஸ் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ மும்மூர்த்தி குருக்களும் மாமன்றம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக கிருஷ்ணன் சுப்பிரமணியம் தெரிவித்துக் கொண்டார்.